மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்த இடங்களில் கால்நடை கிளை நிலையங்கள் மூடப்பட்டு இருக்கின்றன என்ற விவரத்தை கொடுப்பார்களானால் அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஊரில் உள்ள பழையபள்ளி கிளை நிலையமான மருத்துவ மனை மூடிவைக்கப்பட்டு இருக்கிறது மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் இது சம்பந்தமாக மனு எழுதியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மூடி வைக்கப்பட்டுள்ள கிளை நிலையம் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கட்டிடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக சொன்னார்கள். எனவே அதே என்.ஆர்.ஈ.பி. திட்டத்தின் மூலமும் அந்த மாதிரி கிளை நிலையங்களை கட்டி முடிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டு அந்த திட்டம் நிறைவேறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கடிதம் வந்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்கள் வேலை வாய்ப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் அமைக்கும் திட்டம்.

99—(* வினா எண். 18310)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்கள் வேலைவாய்ப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) தமிழ்நாடு பெண்கள் முன்னேற்றத்திற்கான கழகம் அமைப்பதற்கான ஆணையை அரசு 3-10-83 அன்று பிறப்பித்துள்ளது.

(ஆ) இக்கழகம் பெணகளின் முன்னேற்றத்திற்காக முனைந்து செயல்படும். இது ஒரு பொது நிறுவனமாக பதிவு செய்யப்படும். இதன் அலுவலகம் சென்னையில் இருக்கும். இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 1 கோடி ஆக இருக்கும். கம்பெனிகள் பதிவாளரிடம் பதிவு செய்யப்படும் வரை, இக்கழகத்தின் முன்னோடிப் பணிகளைக் கவனிக்க அரசு சிறப்பு அலுவலர் ஒருவரை நியமித்துள்ளது.

(இ) இக்கழகம் 9-12-1983-லிருந்து செயல்படத் தொடங்கியிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழகம் 9-12-83-லிருந்து செயல்படுகிறது என்றும் சென்னையைத் தலைநகரமாகக் கொண்டு இயங்குகிறது என்றும் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தக் கழகத்தில் பெண்களுக்கு எந்தெந்த தகுதியின் அடிப்படையில் உதவிகள் செய்யப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெண்களின் பொருளாதார முன்னேற்றத்தை குறிக்கோளாகக் கொண்டு இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது.

திரு.பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டுவருவதற்காகத்தான் கார்ப்பரேஷன் ஆரம்பிக்கப்படும். பெண்களுக்கு உதவி செய்வது. பொருளாதாரம் முன்னேற வேண்டுமென்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறேன். எந்த தகுதியினுடைய அடிப்படையில் அவர்களுக்கு கடனாக தரப்போகிறீர்களா? அல்லது வேறு ஏதாவது தொழில் செய்வதற்கு உதவி செய்யப்போகிறீர்களா? அல்லது விண்ணப்பம் போட வேண்டும் என்றால் அவர்களுக்கு என்ன தகுதி ஏதாவது நிர்ணயம் செய்துஇருக்கிறீர்களா? என்பதையும் இதுவரையில் யாராவது உதவியைப் பெற்று இருக்கிறார்களா? என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு மகளிர் மேம்பாட்டுக் கழகம் செயல்படுகிறபோது அதற்கு வேண்டிய தகுதி மற்றவைகள் பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவரர்களே, பெண்கள் வேலைவாய்ப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் அமைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள. தாய் குலத்திற்கு இப்போது இருக்கிற வேலை வாய்ப்பின் மீதே பெரும் படையெடுப்பு நடக்கிறது என்பதை நான் கூறிக் கொள்கிறேன். பெண்கள் என்ற ஒரே காரணத்தினால், பல்வேறு பெருத்த சகாய நிதி அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற காரணத்தினால், அதனால் எக்ஸ்ட்ரா செலவு ஆகிறது என்ற காரணத்தினால் பல்வேறு பெண் தொழிலாளர்கள் இன்றைக்கு பல தொழில்களில் ஈடுபட்டுக்கொண்டு இருப்பவர்களை வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள். நான் ஒரு செய்தியைச் சொன்னால் உங்களுக்கே அது அதிர்ச்சியாக இருக்கும். மதுரா கோட்ஸ் என்ற நிறுவனத்தில் முன்பு 2 ஆயிரம் பெண் தொழிலாளர்கள் இருந்தார்கள். இப்போது அங்கே 2 பெண் தொழிலாளர்கள் தான் இருக்கிறார்கள். தாய்மையின் காரணமாக அவர்களுக்கு சகாய நிதி கொடுக்கவேண்டுமென்ற காரணத்தால் முதலாளிகள் இப்படி செய்து இருக்கிறார்கள். ஆகவே நான் கேட்க விரும்புகிறேன். தாய்மைப்பேறு அடைவதே குற்றம் என்கின்ற வகையில் வேலையில் இருக்கின்றவர்களையே வெளியே அனுப்புகின்ற நிலைமையை, வேலைவாய்ப்பு அபிவிருத்தி என்ற பெயரால் அமைந்திருக்கும் இந்தக் கார்ப்பரேஷன் தடுப்பதற்கு சீரியசாகக் கவனித்து நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய உணர்வுகளை அரசு பரிசிலனை செய்யும்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்குக் குறைந்த விலையில் வைக்கோல் விநியோகம் செய்யும் திட்டம்.

100—(*வினா எண். 18352)—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், கால்நடைகளுக்கு வேண்டிய வைக்கோல் குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய அரசிடம் திட்டம் உண்டா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய இரண்டு வட்டங்களில்தான் வைக்கோல் பற்றாக் குறை இருந்தது. இதர வட்டங்களில் வைக்கோல் பற்றாக்குறை ஏற்படவில்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்படவில்லை. எனவே, அந்த மாவட்டத்தில் 1983-84 ஆம் ஆண்டு வறட்சித் துயர் தணிப்புப் பணியின்கீழ் வைக்கோல் விநியோகம் செய்யப்படவில்லை.